**நகராட்சி அலுவலகம்**

**போடிநாயக்கனூர்**

**நாள்: 18.07.2024**

**<u>சாதாரண கூட்ட அழைப்பிதழ்</u>**

2024 **ஆம் ஆண்டு ஜீலை மாதம்** 25.07.2024-**ஆம் தேதி வியாழக்கிழமை காலை** 11.00 **மணிக்கு கீழ்க்கண்ட பொருள் பற்றி முடிவு செய்ய போடிநாயக்கனூர் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நகர்மன்ற கூடத்தில் நடைபெறும். மேற்படி, கூட்டத்தில் தாங்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

***********

**<u>பொருள்கள்</u>**

**<u>பொருள் எண்: 01</u>**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி-2024, மார்ச்-2024, ஏப்ரல்-2024, மே-2024 மற்றும் ஜீன்-2024-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:1103/2020/சி1)

**தீர்மான எண் :** 569– பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்: 02</u>**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி-2024, மார்ச்-2024, ஏப்ரல்-2024, மே-2024 மற்றும் ஜீன்-2024-ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:1103/2020/சி1)

**தீர்மான எண் :** 570 – பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்: 03</u>**

இந்நகராட்சியின் 2023-2024-ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்:1305/2024/சி1)

**தீர்மான எண் :** 571 – பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்: 04</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலுவலக கடித ந.க.எண்.1846/2023/சி-2, நாள்.05.06.2023 இன் படி No Food Waste என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு நடப்பாண்டு வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி, நிறுவனத்தின் பணிகாலமானது 05.06.2024-ஆம் தேதியுடன் முடிவடைவதால், 06.06.2024 முதல் ஓர் ஆண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 1846/2023/சி-2**

**தீர்மான எண்** : 572- பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்: 05</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் காலை உணவுத்திட்டத்தின் கீழ் தயார் செய்யப்படும் உணவுகளை குழந்தைகளுக்கு பரிமாறிட போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 5 பள்ளிகளுக்கு 5 உதவியாளர்களை மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- ஊதியம் வீதம் 06.06.2024 முதல் 05.06.2025 வரை வருடத்திற்கு 12 X 1500 = ரூ.90,000/- யை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு.</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2864/2023/சி-2**

**தீர்மான எண்** : 573 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 06</u>**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் ஜே.சி.பி. வாகனத்திற்கு தகுதிவாய்ந்த ஓட்டுநர் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தால் சங்கர் இன்ஜினியரிங் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டு வாகனம் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்த காலமானது 31.03.2024 ல் நிறைவு பெறுவதால் மேலும் ஒரு ஆண்டிற்கு ( 01.04.2024 முதல் 31.03.2025 முடிய) ஒப்பந்த நீட்டிப்பு செய்து பணிகள்

மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம் .

2) தேர்தல் நடத்தைவிதிகள் அமுலில் இருந்ததால், அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண் 0720 /2024/எச்1)

**தீர்மான எண் :** 574 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 07</u>**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் முதன்மையான பணியான வீடு, வீடாக சென்று குப்பைகளை பிரித்து வாங்கி நகராட்சியில் ஒப்படைக்கும் பணிக்கு தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்திட மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கி இவ்வலுவலக கடித ந.க.எண்.3055.2022.எச்-1 நாள்-26.05.2023ன் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட வேண்டும். முதலாம் ஆண்டு காலமானது 15.06.2024 உடன் முடிவடையவுள்ளதால் 16.06.2024 முதல் மேலும் மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்வதற்கும், பணி ஒப்பந்தத்தின்படி நிறுவனத்தார்க்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் கட்டணத்துடன் கூடுதலாக 10 % உயர்த்தி வழங்கிடவும், இதற்காக மூன்று மாதத்திற்கு ரூ.108.00/- இலட்சத்திற்கு செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அ ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்து வருவதால் அவசரஅவசியம் கருதி 16.6.2024 முதல் மூன்று மாத காலத்திற்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்ததையும் மன்றம் ஏற்கலாம் .

(ந.க.எண்.3055/2022/எச்1)

**தீர்மான எண் :** 575– அனுமதிக்கப்பட்டது..

**<u>பொருள் எண்: 08</u>**

**இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் தூய்மை நகரங்களுக்கான பொதுமக்கள் இயக்கத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக விழிப்புணர்வு பேனர்கள் , நோட்டீஸ்கள். சுவர் விளம்பரங்கள் மற்றும் ஆட்டோ விளம்பரம் ஆகிய இனங்களுக்கு** 2024-2025 **ம் ஆண்டிற்கு**

**செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்**.564, **நாள்** 11.3.2024 **ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்காணும் விபரப்படியாக வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும்.**

| **வ எ ண்** | **பணியின் பெயர்** | **அளவுகள்/ எண்ணிக் கை** | **மூசா நிறுவனத்தின் விலை விகிதம்** | **வைகை ப்ளக்ஸ் நிறுவனத்தின் விலை விகிதம்** | **குரு ப்ளக்ஸ் நிறுவனத்தி ன் விலை விகிதம்** |
|---|---|---|---|---|---|
| 1 | **விழிப்புணர்வு பேனர்** | 1 **சதுரடிக்கு** | **ரூ**.28/- | **ரூ**.32/- | **ரூ**.34/- |
| 2 | **விழிப்புணர்வு பேனர்** (**பிரேமுடன்**) | 1 **சதுரடிக்கு** | **ரூ**.85/- | **ரூ**.88/- | **ரூ**.94/- |
| 3 | **நோட்டீஸ்** (**ஒரு வண்ணம்**) | 1000 | **ரூ**.1500/- | **ரூ**.1700/- | **ரூ**.2000/- |
| 4 | **நோட்டீஸ்** (**பல வண்ணம்**) | 1000 | **ரூ**.2800/- | **ரூ**.3200/- | **ரூ**.3400/- |
| 5 | **சுவர் வண்ண ஓவியம் வரைதல்** | 1 **சதுரடிக்கு** | **ரூ**.120/- | **ரூ**.140/- | **ரூ**.160/- |
| 6 | **ஆட்டோவில் விழிப்புணர்வு** | **நாள் ஒன்றுக்கு** | **ரூ**.2000/- | **ரூ**.2200/- | **ரூ**.2300/- |
| 7 | **பிளக் கார்டு** | **ஒன்றிற்க்கு** | **ரூ**.320/- | **ரூ**.340/- | **ரூ**.360/- |

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்காணும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மூசா டிஜிட்டல் பிரிண்டிங் வேர்ல்ட், தேனி நிறுவனத்தார்க்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.0512.2024/எச்1)

**தீர்மான எண்** : 576- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 09**

இந்நகராட்சியில் நாள் தோறும் சேகரமாகும் கழிவுகளில் மக்கும் கழிவுகள் உரமாக மாற்றப்பட்டு மக்காத விற்பனை செய்ய முடியாத கழிவுகள் வளம் மீட்பு மையங்களில் சேமித்து வைக்கப்படுகிறது- உரம் சேமித்து வைக்கப்படும் மக்காத கழிவுகள் திடக்கழிவு மேலாண்மை

விதிகள் 2016 ன்படி 100 கிலோ மீட்டர் தொலைவிற்குள் செயல்படும் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். ஆனால் , இந்நகராட்சிக்கு 100 கிலோ மீட்டர் தொலைவில் எவ்வித சிமெண்ட் ஆலைகள் இல்லை. இதன் காரணமாக சேமித்து வைக்கப்பட்டுள்ள மக்காத கழிவுகளை அப்புறப்படுத்த இயலாமல் தேங்கி உள்ளது. எனவே தேங்கியுள்ள மக்காத கழிவுகளை இந்நகராட்சியிலிருந்து சுமார் 300 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அரியலூர் பகுதி சிமெண்ட் ஆலைகளுக்கு வாடகை கனரக வாகனங்கள் மூலம் அனுப்ப வேண்டியுள்ளது. எனவே தேங்கியுள்ள மக்காத கழிவுகளையும் தொடர்ந்து சேகரமாகும் கழிவுகளையும் அப்புறப்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- க்கு (இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மக்காத கழிவுகளை தேக்கமடையாமல் அப்புறப்படுத்திட வேண்டியதின் அவசியம் கருதி நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3055 /2022/எச்1)

**தீர்மான எண் :** 577- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 10</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்: 26-இல் உள்ள நகராட்சி டிப்போ ரோட்டில் பழைய வார சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 73 கடைகளை மாத வாடகை முறையில் 9 ஆண்டு குத்தகை படி பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைக்கு எவரும் முன்வரவில்லை.

அதன் காரணமாக மேற்கண்ட 9 ஆண்டு குத்தகை இனத்தினை மூன்றாண்டு வார சந்தை குத்தகை இனமாக நகர்மன்ற தீர்மானம் எண்.492 நாள்.31.01.2024-இன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி குத்தகைக்கு விட அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி, வாரசந்தையில் வசூல் செய்ய வேண்டிய கட்டண விகிதங்கள் மற்றும் வாரசந்தையின் வாயிலில் வாங்க வேண்டிய கட்டண விகிதங்கள் கீழ்கண்ட விபரப்படி உயர்வு செய்து மாற்றியமைத்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**வாரச்சந்தையில் வசூல் செய்ய வேண்டிய கட்டணவிகிதங்கள் மற்றும் சந்தையின் வாயிலில் வாங்க வேண்டிய கட்டண விகிதங்கள்.**

| வ. எண் | விபரம் | முந்தைய வசூல் செய்யப்பட்ட தொகை .(ரு) | தற்பொழுது உயர்வு செய்யப்பட்டு வசூல் செய்ய வேண்டிய தொகை .(ரு) |
|---|---|---|---|
| 1 | பாரம் ஏற்றிய லாரி ஒன்றுக்கு | ரூ.75/- | ரூ.100/- |
| 2 | பாரம் ஏற்றிய ஜீப் ஒன்றுக்கு/ மினி லாரி ஒன்றுக்கு | ரூ.45/- | ரூ.50/- |
| 3 | மாட்டுவண்டி ஒன்றில் எந்தவகை எப்பொருள் எவ்வளவு ஏற்றியிருந்தாலும்வண்டி ஒன்றுக்கு | ரூ.30/- | ரூ.30/- |
| 4 | தள்ளுவண்டி வைத்து பொருட்களைவிற்பனை செய்ய | ரூ.15/- | ரூ.30/- |
| 5 | பாய்கடை ஒன்றுக்கு | ரூ.1.50/- | ரூ.25/- |
| 6 | விற்க கொண்டுவரும் ஆடு ஒன்றுக்கு | ரூ.5/- | ரூ.50/- |
| 7 | விற்க கொண்டுவரும் கோழி ஒன்றுக்கு | ரூ.1.25/- | ரூ.10/- |
| 8 | காய்கறி மூடை ஒன்றுக்கு | ரூ.4/- | ரூ.10/- |
| 9 | உருளைக்கிழங்கு சிப்பம்ஒன்றுக்கு | ரூ.3/- | ரூ.10/- |
| 10 | வளையல்-குங்குமப்பொட்டுக்கடை | ரூ.15/- | ரூ.30/- |
| 11 | கருவேப்பிலை கடை | ரூ.15/- | ரூ.25/- |
| 12 | கூறுகட்டி விற்பனை செய்யப்படும் பொருட்கள் | ரூ.7.50/- | ரூ.10/- |
| 13 | புளிக்கடை(கூடை & சிப்பம்ஒன்றுக்கு) | ரூ.4/- | ரு.25/- |
| 14 | மீன்வியாபாரம் | ரூ.15/- | ரூ.100/- |
| 15 | பலகாரக்கடை | ரூ.7.50/- | ரூ.25/- |
| 16 | பெருக்குமாறுகடை | ரூ.12.50/- | ரூ.20/- |
| 17 | முறுக்குக்கடை | ரூ.12.50/- | ரூ.20/- |
| 18 | அரிவாள் மற்றும் இரும்புகடை சாமான்கள் | ரூ.15/- | ரூ.25/- |
| 19 | சுண்ணாம்புக்கடை | ரூ.12.50/- | ரூ.25/- |
| 20 | காபி,டீ,சுக்குமல்லிகடை | ரூ.7/- | ரூ.25/- |
| 21 | சிறியஉள்ளிமூடைஒன்றுக்கு | ரூ.4/- | ரூ.20/- |
| 22 | பெரியஉள்ளி மூடைஒன்றுக்கு | ரூ.3/- | ரூ.15/- |
| 23 | பெரியஉள்ளி சிப்பம் ஒன்றுக்கு | ரூ.3/- | ரூ.10/- |
| 24 | தக்காளி ராடு ஒன்றுக்கு | ரூ.4/- | ரூ.15/- |

| | | | |
|---|---|---|---|
| 25 | தக்காளி குத்துக்கூடைஒன்றுக்கு | ரூ.3/- | ரூ.10/- |
| 26 | தக்காளிமரப்பெட்டி ஒன்றுக்கு | ரூ.2/- | ரூ.10/- |
| 27 | பச்சைமிளகாய்சிப்பம் ஒன்றுக்கு | ரூ.3/- | ரூ.15/- |
| 28 | பச்சைமிளகாய் மூடைஒன்றுக்கு | ரூ.4/- | ரூ.20/- |
| 29 | கருவாட்டு(சம்பக்கடை)கூறுவைத்து விற்க | ரூ.5/- | ரூ.25/- |
| 30 | கருவாட்டு மூடை ஒன்றுக்கு | ரூ.7/- | ரூ.10/- |
| 31 | கரும்புக்கட்டு ஒன்றுக்கு | ரூ.1.50/- | ரூ.75/- |
| 32 | பலசரக்குக்கடை(புளிஉட்பட) | ரூ.40/- | ரூ.50/- |
| 33 | இளநீர் கடை | ரூ.15/- | ரூ50/- |
| 34 | பூட்டுசாவிரிப்பேர் பார்க்கும்கடை | ரூ.7/- | ரூ.15/- |
| 35 | பூக்கடை | ரூ.7/- | ரூ.20/- |
| 36 | புகையிலை,பாக்குக்கடை | ரூ.20/- | ரூ.20/- |
| 37 | வாழைக்காய் கடை | ரூ.15/- | ரூ.25/- |
| 38 | பழம் வகையறா | ரூ.15/- | ரூ.30/- |
| 39 | கடலை மூடை மற்றும் தேங்காய்மூடை ஒன்றுக்கு | ரூ.7/- | ரூ.10/- |
| 40 | சொலகு-கூடை-விற்பனைசெய்ய | ரூ.12/- | ரூ.15/- |
| 41 | மாட்டு வைக்கோல் விற்பனை | ரூ.12/- | ரூ.15/- |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. உயர்வு செய்யப்பட்ட தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. அதன்படி, பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2389/2023 /அ2)

**தீர்மான எண்** : 578- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள் எண்: 11**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 22 புதுத்தெரு 2 நூற்றாண்டு நிறைவு விழா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள தினசரி கடைகள் 40 தனித்தனி கடைகளாக மாத வாடகை முறையில் பொது ஏலம் / ஒப்பந்த புள்ளி கோருவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 548 நாள்.22.02.2024-இன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, அதன் படி 40கடைகளையும் பொது ஏலம்/ஒப்பந்த புள்ளி கோரப்படுவதற்கு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது

. மேற்கண்ட விளம்பர கட்டண தொகையை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பத்திரிக்கையின் பெயர் | தொகை .ரூ |
|---|---|---|
| 1 | தின தந்தி | ரூ 26,880/- |
| 2 | தமிழ் சுடர் | ரூ 26,355/- |
| | மொத்தம் | ரூ. 53,235/- |

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம் .

ந.க.எண் .2389/2023/அ2

**தீர்மான எண்** : 579 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 12</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் கழிவுநீர் வாய்க்காலில் உற்பத்தியாகும் கொசுக்களை கட்டுப்படுத்திட பயன்படுத்தப்படும் பி.டி திரவம் மருந்து 300- லிட்டர் விநியோகம் செய்திட கடந்த 15.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப்பிரிவுக்குத் தேவையான கழிவுநீர் வாய்க்காலில் உற்பத்தியாகும் கொசுக்களை கட்டுப்படுத்திட பி,டி திரவம் மருந்து 300-லிட்டர் விநியோகம் செய்தல் | முருகன் &கோ, 65. பள்ளி பாளையம் ரோடு, குமார பாளையம் ஈரோடு . | ரூ.1308/- |
| 2 | | ஆர்.ஜே.எண்டர்பிரைசர்ஸ் கே.எம்.ஆர் நகர், நேதாஜி தெரு, எழவமலை ரோடு, ஈரோடு | ரூ.1386/- |

அலுவலகக்குறிப்பு:-

1) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள முருகன் & கோ - ஈரோடு அவர்களின் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்குவதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.50/2023-24/எச்-2**

**தீர்மான எண்** : 580- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 13**

போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு-இந்நகராட்சி பேருந்து நிலைய சிறுநீர் கழிப்பிடங்கள், அண்ணா பள்ளி அருகில் உள்ள சிறுநீர் கழிப்பபிடங்கள்,நகராட்சி அலுவலக கழிப்பறைகளுக்குத்தேவையான கிருமி நாசிணி லெமன் கிராஸ் ஆயில் 200 லிட்டர் உத்தேச செலவினம் ருபாய் 3,00,000/-(ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நகர்மன்றம் அனுமதியை எதிர்நோக்கி 15.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பொருட்களின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் முகவரி** | **விலை விகிதம் (ஒரு லிட்டர்)** |
|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப்பிரிவு-கழிப்பறைகள் சுத்தம் செய்வதற்குத் தேவையான கிருமி நாசினி லெமன் கிராஸ் ஆயில் 200 லிட்டர் விநியோகம் செய்தல் | எஸ்.எம்.ராஜன், போடி | ரூ.1290/- |
| | | எம்.ராஜேஸ்குமார், கோவில் பட்டி. | ரூ.1295/- |

அலுவலகக்குறிப்பு:-

1) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எஸ்.எம்.ராஜன்,போடி அவர்கள் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.72/2023-24/எச்-2**

**தீர்மான எண்** : 581 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 14**

**போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் குடிநீர் கொண்டு வரும் மெயின் குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் கசிவுகளை**

**சரிசெய்ய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால், ஒப்பந்ததாரர் மூலம் கசிவு சரி செய்ய பணியாளர் விநியோகம் செய்ய நகர்மன்ற தீர்மான எண்**:269 **நாள்**: 27.03.2023**ன் படி ரூ.**8.00 **இலட்சம் மதிப்பீட்டில் திரு. எல். எல்லப்பன் (ஒப்பந்ததாரர்) மூலம் ஓராண்டு பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதன் பேரில் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பின் காரணமாக ஒப்பந்தப்புள்ளி கோர இல்லாததால் பணியின் அவசியம் கருதி மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை பணி செய்யவும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.**3.00/- **இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.**3729/2022/**இ**1

**தீர்மான எண்** : 582- அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 15</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் தலைமை குடிநீர் நிலையம் ஆகியவற்றை இயக்குதல் மற்றும் பராமரித்தல் செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (ஜீலை, ஆகஸ்ட், செப்டம்பர் வரை) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ11.70/- இலட்சத்தினை பொதுநியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** 2489/2023/இ1

**தீர்மான எண்** : 583 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 16</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு மேலாண்மை நிலையத்திலுள்ள நிலத்தடி நீர் மற்றும் இந்நகராட்சியில் பயன்படுத்தப்படும் அன்றாட கழிவுநீர் இவ்விரண்டையும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு பரிசோதனை செய்வதற்கு உரிய உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ஐ பொது நிதியில் இருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** 939/2019/இ1

**தீர்மான எண்** : 584 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 17**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதைக் கூடம் , நவீன எரிவாயு தகனமேடை, பாதாள சாக்கடை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றிக்கான உரிமை காலத்தை தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திடம் 2024-2025ஆம் ஆண்டிற்கு புதுப்பிப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-ஐ இலட்சத்தினை பொது நிதியில் இருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** 697/2021/இ1

**தீர்மான எண்** : 585 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 18**

போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு பணிக்குத்தேவையான கிருமிநாசினி பினாயில் (கருப்பு மற்றும் வெள்ளை) 2000 லிட்டர் கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்-483 நாள்-31.01.2024ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் படி 15.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் முகவரி | விலை விகிதம் (ஒரு லிட்டர்) |
|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப்பிரிவு-பணிக்கு தேவையான கிருமி நாசினி பினாயில் (கருப்பு மற்றும் வெள்ளை) 2000 லிட்டர் விநியோகம் செய்தல் | எஸ்.எம்.ராஜன் போடி | ரூபாய்- 87+GST18% |
| | | எம்.ராஜேஸ்குமார், கோவில் பட்டி. | ரூபாய்- 90+GST18% |

அலுவலகக்குறிப்பு:-

1) குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள எஸ்.எம்.ராஜன்,போடி அவர்கள் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1246/2023-24/எச்-2**

**தீர்மான எண்** : 586 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 19**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான சிறியரக வாகனம் **ஜேசிபி (ரோபோ)** வாகனத்தில் உள்ள டயர்கள் நான்கும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் அடிக்கடி டயர்கள் பஞ்சர் ஏற்படுகிறது. இதனால் பொதுசுகாதாரப்பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே புதியதாக ஜேசிபி (ரோபோ) வாகனத்திற்கு 4 எண்ணம் டயர்கள் 10.16.05 என் எச் எஸ் வகை டயர்கள் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி சட்டம் 1998 பிரிவு 57-ன் படி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் ரூ.76,000/- செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்- 2538/2023-24/எச்-2**

**தீர்மான எண்** : 587 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 20**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாளசாக்கடை திட்டத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரித்தல் செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் விநியோகம் செய்ய வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தனியார் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (ஜீலை,ஆகஸ்ட்,செப்டம்பர் வரை) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ7.50/- இலட்சத்தினை பொதுநியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 2890/2023/இ1**

**தீர்மான எண்** : 588 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 21**

போடிநாயக்கனூர் நகராட்சி புதிய தெருவிளக்குக்கான வைப்புத்தொகை ரூ13,50,500/- ஐ தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு நகராட்சி பொதுநிதியில் இருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**: 3021/2022/இ1

**தீர்மான எண்** : 589 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 22**

இந்நகராட்சியில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி மனுதாரர் திரு ராஜா த/பெ முத்து என்பவர் ரசீது எண் ; 135/200, 11.10.2013-ன் படி வைப்புத் தொகை ரூ.3000/- செலுத்தியுள்ளார். மனுதாரர் புதிய குடிநீர் குழாய் இணைப்பிற்கான சென்டேஜ் தொகை செலுத்தும் பொழுது தவறுதலாக வைப்புத் தொகை ரூ.3000/- உடன் ரசீது எண் 120/B1/1/23-24/003346 , 26.10.2023-ம் தேதி ரூ .10,338/- செலுத்தியுள்ளார். அதன் பின்னர் புதிய குடிநீர் குழாய் இணைப்பு மனுதாரருக்கு வழங்கப்பட்டது. எனவே மனுதாரர் இரண்டு முறை வைப்புத்தொகை செலுத்தியதால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரூ.3000/-ஐ குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மனுதாருக்கு திரும்ப வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:-மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 0580 /2024/இ2

**தீர்மான எண்** : 590 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 23**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதி சாலைக்காளியம்மன் கோவில் சாலை, பிஎச் ரோடு, தேனி சாலை ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வாய்க்கால்களில் அதிகம் அளவு மண் மற்றும் செடிகள் வளர்ந்து நீரோட்டத்திற்கு தடையாக உள்ளது.16.05.2024 முதல் 20.05.2024 முடிய தேனி மாவட்டத்தில் மிக கன மழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் மழை காலங்களில் வ.உ.சி நகர் மற்றும் ஜெயம் கார்பார்க்கிங் பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் மழைநீர் உட்புகுந்து பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எனவே எதிர்வரும் பருவமழை காலங்களைக் கருத்தில் கொண்டும் உடனடியாக செயின் டோசர் முலம் மண் மற்றும் செடிகளை அப்புறப்படுத்தும் பொருட்டு நகர்புற உள்ளாட்சி சட்டம் பிரிவு 57-ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டு பணிகள் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினம் ரூ.90800/-க்கும் நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்- 2229/2022-24/எச்-2.**

**தீர்மான எண்** : 591 – பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்: 24**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கொசு ஒழிப்பு கிருமிநாசினிகளின் இருப்பு குறைவாக உள்ளன எனவே கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும் எதிர்கால பருவமழை காலங்களைக் கருத்தில் கொண்டு

டெக்கினிக்கல் மாலத்தியான் 200-லிட்டர் கிருமிநாசிணியினை உத்தேசமாக ரூ.2.00/- இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும், அவசர அவசியம் கருதியும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்- 1203/2024/எச்-2**

**தீர்மான எண்** : 592 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 25</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டத்தில் உள்ள இரண்டு கழிவுநீர் உந்துநிலையங்களை இயக்குதல் பராமரித்தல் மற்றும் நகரில் பாதாள சாக்கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் சரி செய்ய தேவையான பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து உரிய உத்திரவு வரப்பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருமதி T.தவமணி என்பவரின் பராமரிப்பு காலத்தை மூன்று மாத காலம் (ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் வரை) நீடிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ5.50/- இலட்சத்தினை பொதுநியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** 2886/2023/இ1

**தீர்மான எண்** : 593 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 26</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி ஈப்பு எண் TN 60 1693 வாகனத்திற்கு பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மஹிந்திரா அண்டு மஹிந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற Automotive Manufacturers Pvt Ltd - Madurai பணிமனையில் சரி செய்வதற்கும் அதற்கான செலவினம் ரூ.1,10,000/-ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: <u>4251/2023/இ1</u>

**தீர்மான எண்** : 594 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 27**

போடிநாயக்கனூர் நகராட்சி குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டத்தில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் நீரில் குளோரினேசன் செய்வதற்கு ஓராண்டிற்கு தேவையான குளோரின் சிலிண்டர் வாங்குவதற்க்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 10.00/- இலட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து ஈடு செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1355 /2024/இ1

**தீர்மான எண்** : 595 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 28**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கொசு ஒழிப்பு கிருமிநாசியான டெமிபஸ் இருப்பு குறைவாக உள்ளது. எனவே கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும் எதிர்கால பருவமழை காலங்களைக் கருத்தில் கொண்டு 300-லிட்டர் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும், அவசர அவசியம் கருதியும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**-1204/2024/எச்-2

**தீர்மான எண்** : 596 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 29**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் கொசு ஒழிப்பு கிருமிநாசியான பைரித்ரம் இருப்பு குறைவாக உள்ளது. எனவே கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும் எதிர்கால பருவமழை காலங்களைக் கருத்தில் கொண்டு 300-லிட்டர் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : கொசு ஒழிப்புப் பணிகளின் முக்கியத்துவம் கருதியும், அவசர அவசியம் கருதியும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**-1203/2024/எச்-2

**தீர்மான எண்** : 597- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 30**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் சாலை காளியம்மன் கோவில் அருகில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்தில் 50 HP நீர் மூழ்கி மின்மோட்டரில் பழுது ஏற்பட்டுள்ளது அதனை சரி செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6.30/- இலட்சத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அதற்கு 12.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | M/s வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங், தேனி | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி T. தவமணி, தேனி | 1.00% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** :- 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/S வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங் ,தேனி என்பவரின் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2.செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 1096 /2024/இ1

**தீர்மான எண்** : 598- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 31**

போடிநாயக்கனூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தில் சாலை காளியம்மன் கோவில் அருகில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்தில் 400,240,185,95, Sqmm 3.5 core அலுமினியம் கேபிள் பதிக்கவும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 5 HP மோட்டார், 1.5 HP மோட்டார் மற்றும் பேனல் போர்டு பழுது ஏற்பட்டுள்ளது அதனை சரி செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6.00/- இலட்சத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ளவும், அதற்கு 12.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | M/s வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங், தேனி | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | திருமதி T. தவமணி, தேனி | 0.20% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :-** 1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/S வைகை ஹைட்ராலிக் இன்ஜினியரிங் ,தேனி என்பவரின் ஒப்புந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2. செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்: 1097 /2024/இ1

**தீர்மான எண்** : 599- அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 32**

இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்தி நாய்களின் எண்ணிகைகையை கட்டுப்படுத்துமாறும் கால்நடை பராமரிப்புத்துறை மருத்துவர்களை கொண்டு ABC பணிகளை மேற்கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே ABC செய்வதற்கு கீழ்க்கண்ட மருத்துவ உபகரணங்கள் மூன்று மாதங்களுக்கு வாங்குவதற்கும் அதற்கான செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண். | தேவையான பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குளிர்சாதனப்பெட்டி | 1 |
| 2 | ஏர் கூலர் | 2 |
| 3 | நாய் பிடிக்கும் வலை | 4 |
| 4 | Glucose Stand | 2 |
| 5 | மருந்துகள் மற்றும் உபகரணங்கள் | |
| 6 | Post operative care ( ABC பராமரிப்பு செலவினம்) | |

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 1871/2024 / எச்1.

**தீர்மான எண்** : 600 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 33**

இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் , நோய்வாய்ப்பட்ட நாய்கள் மற்றும் வெறிநோய் தொற்றுடைய நாய்களால் பொதுமக்கள், பள்ளி செல்லும் மாணவ , மாணவியர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் ஆகியோர்களுகளை அச்சுறுத்தும் விதமாகவும் , நோய் தொற்று பரவும் விதமாகவும் உள்ளதால் அவ்வகையான நாய்களை பிடித்து உரிய முறையில் பராமரிப்பு செய்து குணப்படுத்தி முறைப்படுத்தவும் மேலும் நகர்ப்பகுதிகளில் சுற்றித்திரியும் மாடு, கழுதை போன்ற கால்நடைகளை பிடித்து உரியவரிடம் ஒப்படைக்கும் வரை உணவு வழங்கி பராமரித்து வரவும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1871 /2024 / எச்1

**தீர்மான எண்** : 601- அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 34</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்பாட்டில் உள்ள கேஸ்அடுப்புகள் மற்றும் பாய்லர் பழுதடைந்து உள்ளது. மேற்படி பழுதினை சரிசெய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-யை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1277/2024/இ1**

**தீர்மான எண்** : 602 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 35</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி தலைமை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள சேகரிப்புத் தொட்டியில் படிகமாக்கலை சுத்தம் செய்திட 10,000/- கிலோ (10 டன்) ALUM கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50/- இலட்சத்தை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ள 21.02.2024ம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ எண்** | **ஒப்பந்ததாரர்களின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை** | **ஒப்பந்தப்புள்ளி % சதவிகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு. முருகன் முத்து பாண்டியம்மாள் , ஆண்டிப்பட்டி | ரூ.3,40,430/- | மதிப்பீட்டை விட 2.94 % குறைவு |
| 2 | ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், | ரூ 3,48,100/- | மதிப்பீட்டை விட |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிபட்டி. | | 5.08% கூடுதல். |

**அலுவலகக்குறிப்பு** : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. முருகன் முத்து பாண்டியம்மாள் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண்**: 677/2023/இ1

**தீர்மான எண்** : 603 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 36**

போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் குடிநீர் மற்றும் பாதாளசாக்கடை பராமரிப்பு பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளை தற்காலிக சீரமைப்பு செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ5.00 இலட்சத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**: 1095/2024/இ1

**தீர்மான எண்** : 604– அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 37**

போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் TN 60 G 0735-மினி டிராக்டர் - வாகனத்திற்கு 2024-2025ம் ஆண்டிற்கு வாகன மராமத்துபணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்காகும் உத்தேச செலவினம் ருபாய்-1,35,000/-நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நகர்மன்றம் தீர்மானம் எண்-567 நாள்-11/03/2024-ன் படி 15.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கு செய்து மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் விவரம் | விலை விகிதம் ருபாய் |
|---|---|---|
| 1 | பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ்,<br>கம்பம் ரோடு, பெரியகுளம். | 94,750/- |
| 2 | கே.எம்.எ. மோட்டார்ஸ்,<br>இ,பி.ஹெட் ஆபிஸ்,பைபாஸ்ரோடு,<br>மீனாட்சினாயக்கன் பட்டி,திண்டுக்கல். | 96,750/- |

அலுவலகக்குறிப்பு:- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு பாண்டியன் ஆட்டோமொபைல்ஸ், கம்பம்ரோடு, பெரியகுளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ந.க.எண்.514/2024/எச்-2

**தீர்மான எண்** : 605 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 38**

போடிநாயக்கனூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2024-2025ம் ஆண்டிற்குத் தேவையான நீர்த்தசுண்ணாம்பு-30டன்,மற்றும் பிளிச்சிங்பவுடர்-8டன் விநியோகம் செய்திட கடந்த 10.07.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் முகவரி | விலை விகிதம் ஒரு கிலோவிற்கு |
|---|---|---|---|
| 1 | பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2024-2025ம்ஆண்டிற்குத்தேவையான நீர்த்தசுண்ணாம்பு-30டன், மற்றும் பிளிச்சிங்பவுடர்-8டன் விநியோகம் செய்திடல் தொடர்பாக | ஸ்வான்கெம்ஆய்வகங்கள் 396/5சத்திரப்பட்டிசாலை, அரண்மனைபுதூர் ,தேனி | நீர்த்த சுண்ணாம்பு-ரு-9.975/- +GST. |
| | | | பிளிச்சிங்பவுடர் ரூ.47.020/- +GST |
| | | அய்யா உணவுகள் வாழ்க்கைபராமரிப்பு,71/1/எ,அன்னஞ்சி விளக்கு, தேனி | நீர்த்த சுண்ணாம்பு ரூ.10.50/- +GST. |
| | | | பிளிச்சிங்பவுடர் ரூ.49.56/- +GST. |

அலுவலகக்குறிப்பு:- குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்வான் கெம்ஆய்வகங்கள், சத்திரப்பட்டி சாலை, அரண்மனைபுதூர்,தேனிஅவர்களின் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1246/2023-24/எச்-2**

**தீர்மான எண்** : 606 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 39**

தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் PM - SVANidhi - Social Economical Profiling என்ற இணையதளம் வாயிலாக அவர்களின் குடும்ப விபரங்கள் மற்றும் உறுப்பினர்களின் விபரங்களை சேகரித்து உள்ளீடு செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, பெறப்பட்ட விபரங்கள் உள்ளீடு செய்யும் பணிக்கு 03.06.2024-ஆம் தேதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைப்புள்ளி விபரம்** |
|---|---|---|
| 1. | Grace Computers & E-Service Center, Bodinayakanur | ஒரு நபர் வீதம்- ரூ.120/- |
| 2. | Karthick Mobiles & Laptop Center, Bodinayakanur | ஒரு நபர் வீதம்- ரூ.110/- |
| 3. | Backiya Computers & E-Service Center, Bodinayakanur | ஒரு நபர் வீதம்- ரூ.100/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த Backiya Computers & E-Service Center, Bodinayakanur திரு.மு.பிரதாப் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றகலாம். மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்-3 இல் உள்ள Backiya Computers & E-Service Center, Bodinayakanur திரு.மு.பிரதாப் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கி பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.0629/2023/எப்-1)**

**தீர்மான எண்** : 607 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 40</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் 2024-2025-ஆம் ஆண்டிற்கான இந்நகராட்சி வரி இனங்கள் ஆன சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் குத்தகை கடை வாடகை கட்டணம் வசூல் செய்வதற்கு பொதுமக்களுக்கு

ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/-யினை (ரூபாய் இரண்டு இலட்சம்)2024-2025-ஆம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5452/2019/அ1)

**தீர்மான எண்** : 608 – அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்: 41**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

"**சாலையோர வியாபாரிகளுக்கான திட்டம் (Street Vendor Welfare)**

**தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்**"

இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -28 அவர்களின் கடித ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022-இல் தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-இன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத்திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 1127 நபர்கள் உள்ளனர். எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனை சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண்.20879/2021/UPA1, நாள்.07.06.2024-இல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள்-2015, அத்தியாயம் IV -இன் படி, நகர விற்பனைக்குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-இன்படி

நகர விற்பனைக்குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக்குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்த 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையாளர் | -- | 1(தலைவர்) |
| 2. | மருத்துவ அலுவலர் | -- | 1 |
| 3. | காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உட்பட) | -- | 2 |
| 4. | நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| 5. | தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | -- | 6 |
| 6. | வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | -- | 1 |
| 7. | அரசு சாரா மற்றும் சமுதாய அமைப்பின் பிரதிநிதிகள் | -- | 2 |
| 8. | குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | -- | 1 |

இவற்றில் 6 உறுப்பினர்கள் மட்டும் தெருவோர வியாபாரிகள் ஆவார்கள். மொத்தமுள்ள 1127 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும். அவற்றில் கீழ்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் | -- | 1 |
| 2. | இதர பிற்படுத்தப்பட்டோர் | -- | 1 |
| 3 | மகளிர் வகுப்பினர் | -- | 1 |
| 4. | மாற்றுத்திறனாளி | -- | 1 |
| 5. | சிறுபான்மையினர் | -- | 1 |
| 6. | பொது / பிற வகுப்பினர் | -- | 1 |

மேற்கண்ட விவரப்படி 6 உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம், இடம், குறித்து நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்-13(3)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக்குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்காணும்படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம்:- நகராட்சி அலுவலகம், போடிநாயக்கனூர்.**

| தேர்தல் விவரப்பட்டியல் | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| தேர்தல் அறிக்கை வெளியிடுதல் | : | 17.06.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | : | 24.06.2024 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |
| வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் | : | 01.07.2024 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | : | 02.07.2024 | காலை 11.00 மணி முதல் |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல் | : | 03.07.2024 | பிற்பகல் 3.00 மணி வரை |
| வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடும் நாள் | : | 03.07.2024 | மாலை 5.00 மணி |
| வாக்கு பதிவு நடைபெறும் நாள் | : | 10.07.2024 | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | : | 10.07.2024 | மாலை 6.00 மணிக்கு மேல் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட அட்டவணையின் படி தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டதினை மன்றம் பின்னேற்க்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும். செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1532/2022/எப்-1)**

**தீர்மான எண்** : 609 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 42</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் தொட்டிகளில் உள்ள கழிவுநீரை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தவும், தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு (Safaimitra Suraksha Sheharunder Swachh Bharat Mission (u) 2.0 ) மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Bsnl Helpling Number –(14420) என்ற எண்ணிற்கு பொதுமக்கள் இலவசமாக தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்க அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.இந்த எண்ணின் பயன்பாட்டிற்கு 5.07.2023 முதல் 4.07.2024 வரை தொகை ரூ.33,300/- செலுத்துமாறு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மதுரை அவர்களிடமிருந்து கடிதம் வரப்பட்டுள்ளது. அதன்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1532/2022/ எச் - 2**

**தீர்மான எண் :** 610 –அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 43</u>**

அரசாணை நிலை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்12.03.2024ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பின்படி இந்நகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள பின்வரும் 10 அங்கன்வாடிமையங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ15,00,000/-டயை, இந்நகராட்சி கல்விநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| **வ.எண்** | **வார்டு எண்** | **அங்கன்வாடி மையம் அமைந்திருக்கும் இடத்தின் பெயர்** |
|---|---|---|
| **1** | 2 | புதூர் நடு தெரு எண்1 |
| **2** | 2 | புதூர் நடு தெரு எண்2 |
| **3** | 6 | சுந்தரபாண்டியன் தெரு (அரண்மனை தெரு) |
| **4** | 6 | சுந்தரபாண்டியன் தெரு (அம்மாகுளம்) |
| **5** | 26 | தென்றல் நகர் |
| **6** | 33 | திருமலாபுரம் |
| **7** | 20 | வெங்கிட்டம்மாள் பார்க் |
| **8** | 27 | வார்டு எண் 15 அண்ணா ஸ்கூல் கட்டிடம் |
| **9** | 27 | வார்டு எண் 15 அண்ணா ஸ்கூல் கிரவுன்ட் 1 |
| **10** | 27 | வார்டு எண் 15 அண்ணா ஸ்கூல் பிளேகிரவுன்ட் 2 |
| **11** | 9 | புதுக்காலனி |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:** 1357/2024/இ1

**தீர்மான எண் :** 611– அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 44</u>**

**போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் மற்றும் குடிநீர் கொண்டு வரும் மெயின் குழாய்களில் அவ்வப்பொழுது ஏற்படும் கசிவுகளை சரிசெய்ய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால், ஒப்பந்ததாரர் மூலம் கசிவு சரி செய்ய பணியாளர் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ**10.00/- (**இலட்சம்**)

**இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. .**

**அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.** 1358/2024/**இ**1

**தீர்மான எண்** : 612 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 45</u>**

அரசாணை நிலை எண் 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்12.03.2024ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பின்படி இந்நகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள பின்வரும் 10 அங்கன்வாடிமையங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ15,00,000/-ஐ இந்நகராட்சி கல்விநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | அங்கன்வாடி மையம் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | 32 | ஆதிதிராவிடர் காலனி (முதல்வர் காலனி) |
| 2 | 3 | சின்னசாமி கோவில் தெரு (போஜன் பார்க் அருகில்) |
| 3 | 26 | ஜீவா நகர் |
| 4 | 21 | கே.எம்.எஸ் லே அவுட் |
| 5 | 10 | மாரியம்மன் கோவில் தெரு (புதுக்காலனி Extension) |
| 6 | 11 | மோகன நராயணசாமி லே அவுட் (நந்தவனம் தெரு) |
| 7 | 3 | பள்ளிவாசல் ( HLR Tank அருகில்) |
| 8 | 6 | போலிஸ் லைன் (T.V.K.K நகர் 100 அடி ரோடு) |
| 9 | 8 | சிறுவர் பூங்கா (1வது நகர பள்ளி வளாகம்) |
| 10 | 8 | பயோனியர் ஹாஸ்டல் (1வது நகர பள்ளி வளாகம்) |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**: 1356/2024/**இ**1

**தீர்மான எண்** : 613 – அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 46</u>**

போடிநாயக்கனூர் நகராட்சி பரமசிவன் கோவில் அடிவாரத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையவளாகத்தில் சேகரித்து வைக்கப்பட்டு உள்ள பழைய கட்டுமான

கருங்கற்கள் மற்றும் வெட்டப்பட்ட (வேம்பு,வாகை,தேக்கு,புளி, மற்றும் முந்திரி மரம்) பல்வகை மரத்துண்டுகள் ரயில்வே ஸ்டேசன் சாலையில் உள்ள பட்டுபோன வேப்பமரத்தினை பொதுஏலம் விட்டு அப்புறப்படுத்துவதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.** 1330/2024/இ1

**தீர்மான எண் :** 614 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 47</u>**

**இந்நகரட்சியில்** 2018-2019 **ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இஸ்லாமிய சமுதாய மயானத்தில் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணியினை ஒப்பந்தப்புள்ளி வழங்கி செயல்படுத்திய ஒப்பந்ததாரர் திருவாளர்** K.A.R Constraction **என்ற நிறுவனத்தின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகைரூ**.50000/- **திரும்ப வழங்க கோரியுள்ளது**. **காப்புத்தொகை ரூ**.50000/-**காலங்கடந்த வைப்புத்தொகை கொண்டு செல்லப்பட்டுவிட்டதால் தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**

**அலுவலக குறிப்பு:** 1. **அனுமதிக்கலாம்**.

2. **பணியினை செயல்படுத்தியதற்கு தணிக்கை ஆட்சேபன ஏதுமில்லை மேலும் பணிமுடித்து பணிமுடிவறிக்கை மற்றும் பயனீட்டுசான்றிதழ் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுவிட்டதால் டெபாசிட் தொகை திரும்ப வழங்கலாம்**

**ந.க.எண்**.222/2024/**பி**3

**தீர்மான எண் :** 615 - அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 48</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய உரிய தொலை தொடர்பு வசதிகளை பேஸ்புக், டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலை தளங்கள் மூலம் தொடர்பு ஏற்படுத்தி கொடுக்கவும், பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டிய அறிவிப்புகளை வெளியிடவும், அதற்க்கான செலவினம் ரூ.8000/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.80,000/- பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்** : 616 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்: 49</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26 தென்றல் நகரில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட சமுதாய கூடக்கட்டிடத்தினை பொது ஏலத்திற்கு கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.      /2024/அ2

**தீர்மான எண்** : 617 – அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்: 50</u>**

இந்நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெராக்ஸ் மிஷின், மற்றும் லேசர் பிரிண்டர் ஆகியவற்றிற்கான டோனர் கொள்முதல் செய்ய நகர்மன்ற தீர்மான எண்.430 நாள்.06.11.2013ன் படி ரூ.1.50/- இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டது.

இதன்படி டோனர் சப்ளை செய்ய 15/07/2024 தேதி விலைப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் பெயர்** | **RICOH MP 25015 Toner ஒன்றின் விலை** | **HP 88A Toner Cartridge ஒன்றின் விலை** |
|---|---|---|---|
| 1 | மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் | ரூ. 2900/- | ரூ. 650/- |
| 2 | ஸ்டார் ஆபிஸ் சொல்யூசன், உத்தமபாளையம் | ரூ. 2800/- | ரூ. 600/- |
| 3 | யூனைடெட் இன்போடெக், மதுரை | ரூ. 3000/- | ரூ. 700/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்டார் ஆபிஸ் சொல்யூசன், உத்தமபாளையம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2883/2023/இ1

**தீர்மான எண் :** 618 – அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 51</u>**

**போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு**.III, **பிளாக்**.1, **நகரளவு எண்**. 2/5 **இல்** 1173.50 **ச.மீ பரப்பளவு இடத்திற்கு திரு**.A.**ராஜேஸ்குமார் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார். மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடித ந.க.எண்**. THENI/VOLP2FTT/2024/2024/TCP **நாள்**.15.06.2024 **சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டததின்படி சாலைகள்**, **மூலைமுடுக்குகள்**, **உள்ளாட்சி உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு** L.P/AD DTCP (TD) NO : SWP/83/2024 **என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும் திட்ட அனுமதியும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்**.

**ஆதலால்**, **மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது** 15.06.2024-**ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை நகராட்சிக்கு தானப்பத்திரம் எண்**.3108/2024 **நாள்**.12.06.2024-**இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது**.

**எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**.

**அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**(ந.க.எண்.1219/2024/எப்-1)**

**தீர்மான எண் :** 619 – பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண். 52</u>**

**போடிநாயக்கனூர் உள்ளூர் திட்டக் குழுமம் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு**.II, **பிளாக்**.27, **நகரளவு எண்**. 4001/3 ( **பழைய நகரளவு எண்**. 4001/1A )**இல்** 1501.30 **ச.மீ பரப்பளவு இடத்திற்கு திரு**.V.K.**சஜீவன் என்பவர் மனைப்பிரிவு அனுமதி கோரியுள்ளார்**. **மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தேனி மாவட்டம் அவர்களது கடித ந.க.எண்**. THENI/2Q3OHMNL/2024/2024/TCP **நாள்**.27.04.2024 **சாலை அமைப்பு வரைபடம் வழங்கப்பட்டததின்படி சாலைகள்**, **மூலைமுடுக்குகள்**, **உள்ளாட்சி உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு** L.P/AD DTCP (TD) NO : SWP/58/2024 **என எண்ணிடப்பட்டு தொழில்**

**நுட்ப அனுமதியும் திட்ட அனுமதியும் நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்**.

**ஆதலால்**, **மனுதாரர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது** 27.04.2024-**ஆம் தேதிய கடிதத்தின்படி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு ஆகியவற்றினை நகராட்சிக்கு தானப்பத்திரம் எண்**.2218/2024 **நாள்**.15.04.2024-**இல் பத்திரப்பதிவு செய்து அசல் ஆவணம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது**.

**எனவே மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**.

**அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்**.

**(ந.க.எண்.1166/2024/எப்-1)**

**தீர்மான எண்** : 620 – பதிவு செய்யப்பட்டது.

(ஓம்) திருமதி ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்
போடிநாயக்கனூர்

//**உண்மை நகல்**//

ஆணையாளர்
போடிநாயக்கனூர்